சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 7/2021

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07ம் நாள் PW2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திரு. முருகையன்<br>த/பெ. பெருமாள் | நாள் 07.08.2025 |
| வயது. 53 | தொழில் |
| கிராமம். புதுக்குப்பம் | வட்டம். |

<u>மனுதாரர் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

1). நான் மனுவில் மூன்றாம் தரப்பினர் மற்றும் மனுதாரர் தரப்பு சாட்சி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். என்னுடைய ஓட்டுநர் உரிமம் நகல் மற்றும் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) சா.சா.ஆ. 1 மற்றும் 2

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) நான் ஓட்டிச் சென்ற வேனின் உரிமையாளர் நாகப்பன். அந்த வாகனம் சுற்றுலா பயணம் செய்யும் வாகனம் ஆகும். அந்த வாகனம் விழுப்புரம் போக்குவரத்து அலுவலகத்தில் பதியப்பட்ட வாகனமாகும். விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் ஏதும் அளிக்கவில்லை. விபத்து சம்மந்தமாக போலிசார் குற்ற இறுதி அறிக்கையில் என்னை சாட்சியாக சேர்த்துள்ளார்களா என்றால் சேர்த்துள்ளார்கள். விபத்து சம்மந்தமாக முதன் முதலில் இந்நீதிமன்றத்தில்தான் சாட்சியம் அளிக்கிறேன், வேறு எங்கும் சாட்சியம் அளிக்கவில்லை. போலிசாரின் குற்ற இறுதி அறிக்கையை பார்த்தால்தான் என் வேன் மீது லாரி மோதியதா என்று தெரியவரும்

என்றால் சரிதான். என் வேன் மீது லாரி மோதியிருந்தால் என் வேனுக்கு சேதாரம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரிதான். என்னுடைய வேனின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை. வேனின் உரிமையளார் வேனுக்கு ஏற்பட்ட சேதாரத்திற்காக நஷ்ட ஈடு கேட்டு மனு தாக்கல் செய்தாரா என்று எனக்குத் தெரியாது.

3) விபத்து தேதியில் மட்டும்தான் நான் வேனை ஓட்டிவந்தேன் என்றாலும், வேனின் உரிமையாளரிடம் நான் ஓட்டுநராக பணி புரியவில்லை என்றாலும் சரிதான். நான் ஓட்டிச் சென்ற வாகனம் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டதா என்றால் ரெக்கவரி வேன் வைத்து வேன் மோட்டார் வாகன ஆய்வகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. லாரி மோதியவுடன் நின்றதா என்றால் மோதியவுடன் சென்றுவிட்டது. அதனால் அந்த லாரியின் பதிவு எண்ணை என்னால் பார்க்க முடியவில்லை என்றால் சரிதான். புகார் எவ்வளவு நாள் கழித்து கொடுக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது. உண்மையில் லாரி வேன் மீது மோதியிருந்தால் வேனிற்கு பின்னால் வேலை செய்தவர்களும் அடிப்பட்டிருப்பார்கள் என்றால் நாங்கள் இடது பக்கம் வேலை செய்து கொண்டிருந்தோம். லாரி, வேனின் பின்புறம் வலது பக்கத்தில் மோதியது. நான் கைத்தடை போட்டு வேனை நிறுத்தியதாக கூறுவது மனுவிற்காக என்றால் சரியல்ல. கைத்தடை போட்டால் முன்சக்கரம் சுற்றாது என்றாலும், பின் சக்கரம் சுற்றும் என்று சொன்னால் பின் சக்கரம் சுற்றாது, முன் சக்கரம் தான் சுற்றும். நான் கழற்றி மாற்றியது பின்னால் இடப்புறம் உள்ள சக்கரம் என்றால் சரிதான். கைத்தடை போட்டிருந்தால் பின்னால் உள்ள சக்கரத்தை கழற்றி மாற்ற இயலாது என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே சாட்சிகள் அளித்த வாக்குமூலங்களின் படி கைத்தடை போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) நான் வேனின் பார்க்கிங் விளக்குகளை எரியவிட்டதாகவும், டார்ச் அடித்துக்

காட்டியதாகவும் கூறுவது ஏற்கனவே கூறிய சாட்சிகளின் அடிப்படையில் என்றால் சரியல்ல. ரிப்லக்டர் வைத்து சக்கரத்தை கழற்றி மாற்றியது பொய் என்றால் சரியல்ல. சாலை, இருவாகனங்கள் செல்லும் சாலை என்றால் சரிதான். ஒரு வழியில் வாகனத்தை நிறுத்தினால் மற்றொரு வழியில்தான் வாகனங்கள் செல்லும் என்றால் சரிதான். சுமார் 200 வாகனங்கள் என் வாகனத்தை கடந்து சென்றிருக்கும். லாரி வரும்பொழுது வாகனங்கள் தொடர்ச்சியாக வந்ததா என்றால் லாரி மட்டும்தான் வந்தது. நான் கூறும் சாலை கீழிருந்து மேல் நோக்கி செல்லும் சாலை என்றால் சரிதான். நான் வாகனத்தை ஓரமாக நிறுத்தியது பொய் என்றால் சரியல்ல.

5) என் முதல் விசாரணையில் என் வேனில் பயணம் செய்த மற்ற பெண்கள் வேனின் முன்புறமாக சாலையில் இருந்து கீழே ஓரமாக தரையில் அமர்ந்திருந்தனர். வேன் பெண்கள் மீது மோதியிருந்தால் வேனின் முன்புறம் சேதம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் விபத்து ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் காவல் நிலையத்தில் வைத்து வாங்கினார்கள்.

மறுவிசாரணை – இல்லை.